# தமிழ் பிரிவு

## MOTHER TONGUE DEPARTMENT

## ABOUT

- நடவடிக்கைகள் மூலம் தமிழ் மொழியைக் கற்றல்
- தமிழ்மொழியை வாழும்மொழியாக தலைமுறை தோறும் கொண்டு செல்வது

தமிழ் மொழி பிரிவின் தலையாய நோக்கம் மாணவர்களைத் தமிழ் மொழியில் சரளமாக பேச பயிற்சி அளிப்பதாகும். தமிழ் மொழியின் மீது பற்றும் மரியாதையும் வளர்ப்பதற்கு தமிழ்மொழி பிரிவு மாணவர்களுக்குப் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது.

மாணவர்கள் தமிழ் மொழியைச் சரளமாக பேசவும் தமிழ் கலாசாரத்தைப் பின்பற்றவும் புரிந்துகொள்ளவும் தமிழ் மொழி முகாம் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.

## SIGNATURE PROGRAMMES


Students Jeevita and Durga hosting the Quiz Segment

**உயர் நிலை 1-5 வரையிலான மாணவர்களுக்கு**

பள்ளியில் தமிழ் மொழியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல நிகழ்ச்சிகள் பள்ளியின் தமிழ் மொழி பிரிவால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் மாணவர்களின் கற்றல் பயணத்தில் உறுதுணையாக விளங்குகின்றன. இந்த ஆண்டு ஜனவரி மாதம் உயர்நிலை மூன்று, நான்கு, ஐந்து மாணவர்களுக்கு நாடக பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது நாடக பட்டறை மாணவர்களை வெகுவாக கவர்ந்தது. மாணவர்கள் தங்கள் கற்பனையை எப்படி ஒரு படைப்பாக உருவாக்குவது என்று தெரிந்துகொண்டனர்.

உயர்நிலை ஒன்று இரண்டு மாணவர்களுக்குக் கோலம் வரையும் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. எதிர்பார்த்தற்கு மேலாக மாணவர்கள் தங்கள் கற்பனைக்கு ஏற்ப மிக சிறப்பாக கோலம் வரைந்தனர்.


Students enthusiastically drawing kolam

**உயர் நிலை 1-3 வரையிலான மாணவர்களுக்கு**

தமிழ் மொழி முகாம் (2) உயர்நிலை ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் நோக்கம் மாணவர்கள் தெளிவாக பயமின்றி தமிழ் சொற்களை உச்சரிக்கவேண்டும் என்பதாகும்.

மேலும் தைரியமாக பிறருடன் பேசுவதற்கு இந்தப் பட்டறை உதவியது.

இந்தப் பட்டறை மாணவர்களின் வாய்மொழி தேர்விற்கு மிக உகந்ததாக அமைந்தது.



Deepavali Celebration

**தீபாவளி கொண்டாட்டம் அனைத்து பள்ளி நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டது**

தீபாவளி கொண்டாட்டம் ஒவ்வொரு ஆண்டும் கான் எங் செங் பள்ளியில் மிக கோலாகலமாக நடைபெறும். நிகழ்ச்சியை மாணவர்கள் தமிழாசியர்களின் துணைகொண்டு வழிநடத்துவர். தீபாவளி நிகழ்ச்சியைப் பற்றி நன்கு புரிந்துகொள்வதற்கு பள்ளி மாணவர்களுக்கு ஒரு சஞ்சிகை ஆங்கிலத்தில் தமிழாசிரியை கீதாவால் எழுதப்பட்டு தீபாவளி கொண்டாடத்தின் அன்று பள்ளியின் அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அந்தப் பள்ளிச் சஞ்சிகையைப் படிப்பதற்கு மாணவர்களுக்கு நேரம் கொடுக்கப்பட்டது. சஞ்சிகையில் உள்ள தகவல்களைக் கொண்டு கேள்விகள் கேட்டப்பட்டன. சரியாக பதிலளிக்கும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கபட்டன.

மேலும் நிகழ்ச்சிக்கு அழகு சேர்ப்பதற்கு இராமாயண நாட்டிய நாடகம் நடைபெற்றது. நாட்டிய நாடகத்தை பாஸ்கர் ஆட்ஸ் நடன குழுவினர் நடத்தினர். இந்த நாட்டிய நாடகம் கர்நாடக இசையுடன் அரங்கேறியது.


Candid shot at UPTLC

**உமறு புலவர் தமிழ் மொழி நிலையம் உயர்நிலை 1&2**

ஆண்டுதோறும் தமிழ்த் திருவிழா உமறு புலவர் தமிழ் மொழி நிலையத்தால் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இந்த விழாவில் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள், கைவினை பொருட்களைச் செய்யும் பட்டறை உடல் ஆரோக்கியத்திற்கு மாணவர்களுக்கு யோகசான பயிற்சிகள் என்று தமிழர்களின் அனைத்து அம்சங்களும் இடம்பெறுகின்றன. இதில் கலந்து பயன்பெற உயர்நிலை ஒன்று இரண்டு மாணவர்கள் சனிக்கிழமை காலை பெற்றோரின் அனுமதியுடன் தமிழாசிரியர்களின் துணையுடன் உமறு புலவர் தமிழ்மொழி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவர்கள் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு மகழ்ந்தனர்